**முக்கிய வார்த்தைகள்:**
*சிலதுர்ரஹ்ம்*
*உறவுமுறை / உறவுகள்*
*மன்னியுங்கள் / மன்னிப்பைத் தேடுங்கள்*
*அருள்கள்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**27 மார்ச் 2026 / 07 ஷவ்வால் ஹிஜிரி 1447**

# உறவுமுறைகளைப் பாதுகாப்பதில் ஏற்படும் சோதனைகள்

**الْحَمْدُ لِلَّهِ وَفَّقَ مَنْ شَاءَ لِمَكَارِمِ الْأَخْلَاقِ، وَهَدَاهُمْ لِمَا فِيهِ فَلَاحُهُمْ يَوْمَ الْمَسَاقِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، الْمَلِكُ الْخَلَّاقُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ أَفْضَلُ الْبَشَرِ عَلَى الْإِطْلَاقِ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ وَمَنْ تَبِعَهُمْ بِإِحْسَانٍ إِلَى يَوْمِ التَّلَاقِ. أَمَّا بَعْدُ، قَالَ اللَّهُ فِي كِتَابِهِ الْعَزِيزِ: يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும், அல்லாஹ்வைப் பற்றிய உணர்வோடு இருப்போமாக! அல்லாஹ்வின் மீதான "தக்வா" [பக்தியை] தொடர்ந்து பற்றிப் பிடிப்போமாக! மறுமை நாளில் அல்லாஹ்வின் நிழல் நம்மனைவருக்கும் கிடைக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் இருந்துக் கொண்டிருக்கும் இந்த ஷவ்வால் மாதத்தில், ஒருவர் மற்றவரைச் சந்தித்து **"ஸிலதுர்ரஹ்ம்"** எனப்படும் உறவுமுறையைப் பாதுகாத்து, அதனைப் பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு, இந்த வார "குத்பா" பிரசங்கத்தில் இச்சீரிய செயல்பாட்டையும், அதனைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்களையும் பற்றி கவனம் செலுத்தப்பட உள்ளது.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**
புனிதமிக்க ரமதான் மாதம் நம்மைக் கடந்து சென்று விட்டது. ரமதான் மாதம் முழுவதிலும் நாம் ஏற்படுத்திக் கொண்ட சிறந்த மதிப்பீடுகளுடன் நாம் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில், **ஸிலதுர்ரஹ்மை** ப்பலப்படுத்துகின்ற இதமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பது, ஒன்று கூடுதல், அன்பு மற்றும் பாசத்தை வெளிப்படுத்துதல் ஆகியவற்றால் அலங்கரிக்கப்படும் ஷவ்வால் மாதத்தில் இப்போது நாம் இருந்துக் கொண்டிருக்கின்றோம்.

எனினும், மக்களுக்கு மத்தியில் காணப்படும் **உறவுமுறை**, எப்போதும் எளிதானதாகவும் இன்பகரமானதாகவும் இருப்பதில்லை என்பது யதார்த்த நிலையாகும். சில நேரங்களில், அமைதியாகவும் இணக்கமானதாகவும் காணப்படும் உறவுமுறை, மற்ற சில நேரங்களில் பதற்றம் மற்றும் தவறான புரிதல்களால் சோதனைக்குள்ளாகி விடுகிறது. மிகப் பெரிய சோதனைகளுடன் கூடிய **ஸிலத்துர்ரஹ்ம்** என்பது ஒரு அமானிதமாகும்; அதனைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வுடன் நாம் காணப்பட வேண்டும். நான் இவ்வாறு கூறுவதற்கு என்ன ஆதாரம்? என நீங்கள் கேட்கலாம்.

**ஸிலத்துர்ரஹ்ம்** மைப் பாதுகாக்கும் செயல், அமைதியான மற்றும் இலகுவான காலங்களில் மட்டும் செயல்படுத்தப்படுவதாக இருப்பது கூடாது; மாறாக, சோதனைக்குரிய காலங்களிலும் **உறவுமுறை** தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ள கருத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் ஒரு ஹதீதை நவின்றுள்ளார்கள்: அதன் விளக்கமானப் பொருள் பின்வருமாறு:

"மற்றவர்கள் நம்முடன் **ஸிலதுர்ரஹ்ம்** மை, அதாவது, உறவுமுறையைப் பாதுகாத்து, நல்ல முறையில் நடந்து கொள்ளும் போது, நாமும் அவர்களுடன் அதே மாதிரி நடந்து கொள்வதை ஒரு சிறந்த செயல் எனக் கூறி விட முடியாது; மாறாக, மற்றவர்கள் நம்முடன் **ஸிலதுர்ரஹ்மை** அதாவது, உறவுமுறையைத் துண்டித்துக் கொள்ளும் போது, நாம் அவர்களுடன் சேர்ந்து வாழ முயற்சிப்பது தான், சிறந்த செயலாகும். **ஸிலதுர்ரஹ்மை** உண்மையாகப் பாதுகாத்த செயலாகும்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

1, சிறந்த நடத்தை [இதற்கு அரபியில் இஹ்சான் எனப்படுகிறது] 2, பொறுமை 3, **மன்னிக்கும் ஆற்றல்** ஆகிய மூன்று தன்மைகளும் நம்மிடம் காணப்பட்டால், **ஸிலதுர்ரஹ்ம்** அதாவது, உறவுமுறையைப் பாதுகாப்பதில் ஏற்படும் சோதனைகளை நாம் வெற்றி கொள்ளலாம். இந்த மூன்று உடன்பாடான மதிப்பீடுகளும் ரமதான் எனும் மத்ரஸாவில் நாம் இருக்கும் போது நம்மிடம் உறுதியாக ஏற்பட்டது. எனினும், இம்மூன்று மதிப்பீடுகளையும் நாம் செயல்படுத்துவதற்குத் தடையாக இருப்பவை கர்வம் மற்றும் "நான்" எனும் அகந்தை ஆகிய இரண்டு விஷயங்களாகும்.

கர்வமும் அகந்தையும் மற்றவர்களை விட "நானே உயர்ந்தவன்", "முக்கியமானவன்" எனும் சிந்தனையை ஒருவரிடம் ஏற்படுத்துகின்றன. திருக்குர்ஆனின் "லுக்மான்" எனும் அத்தியாயத்தின் 18-வது வசனத்தில் கர்வம், அகந்தை, ஆணவம் ஆகிய இரண்டு தன்மைகளும் பழிப்புக்குரியவை, அல்லாஹ்வினால் வெறுக்கப்பட்டவை எனப் பின்வருமாறு கூறப்படுகிறது:

وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِى ٱلْأَرْضِ مَرَحًا ۖ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ ﴿١٨﴾

பொருள்: [லுக்மான் தனது மகனுக்குக் கூறினார்; என் அருமை மகனே!] ”பெருமையோடு உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமையும், ஆணவமும் கொண்ட எவரையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான்”

மேலும், கர்வம் அகந்தை, ஆணவம் ஆகியவை, முறிந்த **உறவைச்** சரி செய்வதற்கும் கூட, தடையாக உள்ளன. அவை, தவறான புரிதல்கள், புண்பட்ட உணர்வுகள், மனக் கசப்புகள் ஆகியவைத் தொடர்வதற்கும் காரணமாக உள்ளன. எந்தளவுக்கெனில், ஏற்கனவே சிறப்பாகவும் அன்பினால் நிரப்பமானதாகவும் இருக்கும் **உறவுமுறையை** முறிப்ப தாகவும் உள்ளன.

சற்று முன்பு கூறப்பட்ட ஹதீதில் காணப்படும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வழிகாட்டுதலையும், ஒவ்வொரு மனிதனின் **உறவுமுறையும்** சோதனையை எதிர்கொள்ளும் என்ற உண்மையையும் ஏற்றுக் கொண்டு, மூன்று விஷயங்களில் சிந்தனை செய்யுமாறு இன்றைய ”குத்பா” பிரசங்கம் நம்மைக் கேட்டுக் கொள்கிறது. அந்த மூன்று விஷயங்களும் **ஸிலதுர்ரஹ்ம்** எனப்படும் **உறவுமுறை** சோதனைக்குள்ளாகும் போது அதனைப் பாதுகாக்கும்.

**முதலாவதாக: கர்வம் மற்றும் அகந்தையின் நுட்பமான விதைகள் உள்ளத்தில் மெதுவாக ஊர்ந்து செல்வதைக் கவனத்தில் கொள்வது.**
இவ்விரு கெட்ட தன்மைகளும் நம்மை அறியாமலேயே நம்மில் ஏற்படுகின்றன; நாம் தாம், எப்போதும் சரியாக இருக்கின்றோம் எனும் சிந்தனை அவற்றை ஏற்படுத்துகின்றன; **மன்னிப்புத் தேடுவதை** விட்டும் நம்மைத் தடுக்கின்றன; மற்றவர்களைத் தரக்குறைவாக நினைக்கத்

தூண்டுவதோடு, அவர்கள் விஷயத்தில் எதிர்மறையான அனுமானங் களையும் உருவாக்குகின்றன.

உண்மையில், வாதாட்டத்தில் ஈடுபடுவதை விட, மற்றவர்கள் சொல்வதை நாம் காது தாழ்த்திக் கேட்க முற்பட்டால், பழிக்குப் பழி வாங்குவதைத் தவிர்த்து, **மன்னிப்பதற்கு** நாம் முக்கியத்துவம் கொடுத்தால், அமைதி ஏற்பட வேண்டுமென்பதற்காக நம்மை நாம் தாழ்த்திக் கொண்டால் அல்லாஹ்வினால் விரும்பப்படும் நடத்தையை நாம் தேர்ந்தெடுத்த வர்களாக ஆகுவோம்.

**இரண்டாவதாக: எப்போதும் நல்லிணக்கத்தின் பாதையைத் தேர்ந்தெடுத்தல்**

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலிருந்து நம்மை நாம் தூரமாக்கிக் கொள்வதும், நல்லிணக்கம் ஏற்பட மறுதரப்பினர் முதலில் அடியெடுத்து வைக்கட்டும் என எதிர்பார்ப்பதும் இலகுவான காரியமாகும். ஆனால் இச்சிந்தனை சூழ்நிலையை மேலும் மோசமாக்குவதாக அமையும். மறுதரப்பினருக்கு ஸலாம் கூறுதல், மனதைக் குளிர வைக்கும் குருங்செய்திகளை அனுப்புதல், மனப்பூர்வமாக அவர்களிடம் **மன்னிப்புக் கேட்டல்** ஆகியவற்றை நாம் செயல்படுத்துவதற்கு, துணிவு, நேர்மை, அனைத்துக்கும் மேலாக, "நான்" எனும் அகந்தையை அடக்குவது ஆகியவை நம்மிடம் காணப்பட வேண்டும். அவை தான், அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்கான உளப்பூர்வமான விருப்பத்தைப் பிரதிபலிப்பவையாகும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் நோக்கம், யார் சரியானவர், யார் தவறானவர் என்பதைத் தீர்மானிப்பதல்ல; மாறாக, அல்லாஹ்வின் திருப்திக்காக, **ஸிலதுர்ரஹ்மை** ப்பாதுகாப்பதும், முறிந்த **உறவுமுறையை** மீட்டிக் கொள்வதும் ஆகும்.

**மூன்றாவதாக: "ஒவ்வொரு உறவுமுறையும் ஒரு அமானிதமாகும்; "பரகத்" எனும் அல்லாஹ்வின் அருளின் மூலமாகும்" என்பதை அறிதல்**

ஒவ்வொரு தனிநபரும், பெற்றோர்கள், பிள்ளைகள், உடன் பிறப்புகள், கணவன், மனைவி எனும் வாழ்க்கைத் துணைகள், நண்பர்கள், அண்டை

வீட்டார்கள் ஆகிய அனைவரும் நம் வாழ்க்கையில் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்படுபவர்களாகும். அவர்களில் ஒவ்வொருவருக்கும் மற்றவர்கள் மீது உரிமை உள்ளது. அந்த உரிமைகளில் ஒன்று, மற்றவர்களை அன்புடனும் கருணைச் சிந்தனையுடனும் நடத்துவதாகும். அதுதான், உண்மையில், ஒருவரது "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாகும். நாம் **உறவுமுறைகளை,** ஓரிறை நம்பிக்கையின் [ஈமான்] வழிகாட்டுதல், பொறுமை, அன்பு, இஹ்ஸான் எனும் உயர்வான நடத்தை ஆகியவற்றால் வளர்த்தால் நமக்கிடையே அல்லாஹ் தனது **அருள்களை** ஏற்படுத்துவான்.

இதற்கு மாறாக, நாம் **உறவுமுறை** எனும் அமானிதத்தைப் புறக்கணித்தால், நாம் **உறவுகளை** இழந்து விடுவோம் என்பது மட்டுமல்ல, உறவுமுறையின் காரணமாக ஏற்படும் "பரகத்" எனும் **அபிவிருத்தியையும்**, செல்வ செழிப்பையும் இழந்து விடுவோம். எனவே, **உறவுமுறையை** முடிந்த வரைச் சிறப்பாகப் பாதுகாப்போமாக! காரணம், அதன் மூலமாக நம்மை நாம் அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கிக் கொண்டவர்க ளாகவும், அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றியவர்களாகவும் ஆகுவோம்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**
நாம் ஷவ்வால் மாதத்தில் இருந்துக் கொண்டிருக்கின்றோம்; நமது **ஸிலதுர்ரஹ்ம்** எனும் உறவுமுறையைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இப்புனிதமிக்க மாதத்தை அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வோமாக! ஸலாம் கூறி "முஸாஹபா" செய்வதற்கு நமது கைகளை நீட்டுவோமாக! ஒருவர் மற்றவரின் நலனை விசாரித்துக் கொள்ளும் வகையில், அவர்களுக்கு அழைப்பு விடுத்துக் கொள்வோமாக! மன்னிப்பைத் தேடுவோமாக! **மன்னிக்கத்** தயாராகுவோமாக!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நாம் இன்று அனுபவிக்கும் **உறவுமுறையின்** இனிமையைப் பாதுகாப்பானாக! **உறவுமுறைகளில்** பலஹீனம் ஏற்படும் போது, நம்மில் மென்மையையும் பணிவையும் ஏற்படுத்துவானாக! நமது ஒவ்வொரு **உறவுமுறையையும் அருள்களின்**

ஆதாரங்களாகவும், மூலங்களாகவும், இம்மையிலும் மறுமையிலும் நமக்கு நன்மைகளை வழங்குபவையாகவும் ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا

رَبِّ العَالِمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.